DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 43 /2025

Deposition of Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : அய்யர் | Father's/Husband's Name : | சுப்பையன் |
| Village | : ஏத்தக்கோவில் | Taluk | : ஆண்டிபட்டி |
| Caste | : | | |
| Religion | : | வயது | : 69 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**1)** பிரதிவாதி எனக்கு பழக்கமானவர். பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாமக ஜக்கம்பட்டியை சேர்ந்த ராஜா தான் பிரதிவாதியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் எவ்வளவு ரூபாய் கடன் வாங்கியிருக்கிறார் என்றால் முதலில் ரூ.8,00,000/– என்று சொன்னார் தற்போது ரூ.10,000/– என்று சொல்கிறார். பிரதிவாதி வாங்கிய ரூ.8,00,000/–ல் எவ்வளவு ரூபாய் திரும்ப செலுத்தியிருக்கிறார் என்று கேட்டால் ரூ.10,000/– மட்டும் தான் எனக்கு பிரதிவாதி கொடுக்க வேண்டிய பணம். பிரதிவாதியிடம் மொத்தம் எத்தனை புரோநோட்டுகள் வாங்கியிருக்கிறேன் என்றால் 13 புரோநோட்டுகள் எழுதி கொடுத்து பணம் வாங்கியிருக்கிறார். மேற்படி 13 புரோநோட்டுகள் என் கைவசம் தான் இருக்கிறது என்றால் இல்லை, ரூ.4,00,000/–க்கு எழுதி கொடுத்த புரோநோட்டு மட்டும் தான் என்னிடம் இருக்கிறது மற்ற நோட்டுக்களை பிரதிவாதியிடமும் அவரது அண்ணனிடமும் திருப்பி கொடுத்துவிட்டேன். தாவா புரோநோட் என்னிடம் எப்படி வந்தது என்று கேட்டால் பிரதிவாதி கைமாற்றாக வாங்கிய பணத்துக்கு எழுதி கொடுத்தார்.

2) என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு பிரதிவாதி அவர் கொடுத்த 13 புரோநோட்டுக்களையும் திரும்ப கொடுக்கச் சொல்லி அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பினேனா என்று கேட்டால் இல்லை. பொதுவாக பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும் போது சிட்டையில் எழுதி கொடுப்பேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும்

ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. நான் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக எழுதி வைத்துள்ள சிட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன். அந்த சிட்டையை பார்த்தால் பிரதிவாதி எனக்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்ற விபரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த சிட்டையில் நான் பிரதிவாதிக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்ற விபரம் இருக்கும் என்றால் சரிதான்.

3) இந்த வழக்கு தவிர்த்து பிரதிவாதி மீது வேறு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் ஆமாம், தாக்கல் செய்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் பிராது தான் நான் பிரதிவாதி மீது தாக்கல் செய்த மற்றொரு வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராது என்றால் சரிதான். அதன் நீதிமன்ற சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் நான் தாக்கல் செய்திருந்தபுரோநோட்டு நகல் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த புரோநோட்டின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தேனி சார்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் இந்த வழக்கு பற்றி சொல்லவில்லை என்றாலும் இந்த வழக்கில் சார்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்கை சொல்லவில்லை என்றாலும் சரிதான். பிரதிவாதியுடன் இருந்த பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாகதேனி காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

4) என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் கொடுத்த புகாரின் நகல் என்றால் சரிதான். அந்த புகாரின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகாரின் அடிப்படையில் விசாரணை நடைபெற்ற பின்பு வெளியில் நடந்த பேச்சுவார்த்தைக்கு பின்பு 29.11.2024 ம் தேதி நானும் பிரதிவாதியும் ஒரு வரவு செலவு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்று கேட்டால் புரோநோட்டை திரும்பக் கொடுப்பதற்காக வாங்கிய கையொப்பம். அந்த ஆவணத்தில் உள்ள வாதியின் கையொப்பம் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் நான் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்யும் போது எடுத்த புகைப்படம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதி என்ன எதிர்வாதம் செய்கிறார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும்.

5) வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதியவர் மற்றும் சாட்சிகள் கையொப்பம் காலியாக இருக்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் எழுதியது என்று கேட்டால் நிரப்பப்படாத புரோநோட்டை சரவணன் கையொப்பம் செய்து கொடுத்தார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையொப்பம் பின்னிட்டு போடப்பட்டது என்றால் அந்த சாட்சிகளின் முன்னிலையில் தான் நான் பணம் கொடுத்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ரூ.10,000/- என்று எழுத்தால் எழுதப்பட்டிருப்பது மேலே ஒரு கையெழுத்தும் கீழே ஒரு கையெழுத்துமாக இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல, ஒரே கையெழுத்தாகத் தான் இருக்கிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கடைசி வரியில் "பெற்றுக்கொள்வேனாகவும்" என்று இருப்பதும் வேறு கையெழுத்தாக இருக்கிறது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் கையெழுத்து ஒரே மாதிரியாக இல்லை என்றாலும் வேறு வே றாக இருக்கிறது என்று சொன்னாலும் சரியல்ல.

6) வா.சா.ஆ.1 ஆவணத்திலும், பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சரவணன் என்ற கையொப்பமும் வெவ்வேறாக இருக்கிறது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 தேனி காவல் கண்காணிப்பாளரிடம் நான் கொடுத்த 20.02.2023ம்தேதி புகாரில் பிரதிவாதி சரவணன் வாங்கிய ரூ.8,00,000/-கடனில் 28.09.2022ம் தேதி ரூ.1,65,000/-மும் கொடுத்துள்ளார் என்றும் மீதி தர வேண்டியது ரூ.6,35,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பிரதிவாதி என்னிடம் 2017ம் ஆண்டிலிருந்து 2021ம் ஆண்டு வரை கடன் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகாரில் விசாரணை செய்த காவலர்கள் எங்கள் பிரச்சனையை வெளியில் வைத்து தீர்த்துக்கொள்ள சொன்னார்கள் என்றால் புரோநோட் சம்பந்தமான பிரச்சனை என்பதால் வெளியில் வைத்து தீர்த்துக் கொள்ளச் சொன்னார்கள்.

7) பிரதிவாதி என்னிடம் வாங்கிய பணத்தை முழுவதுமாக செலுத்திவிட்டார் என்று சொல்லி கடன் சிட்டையை காண்பித்ததால் தான் வெளியில் வைத்து பேசி முடிக்க சொன்னாகள் என்றால் சரியல்ல, அவ்வாறு சொல்லவில்லை. வா.சா.ஆ.2 அறிவிப்பில் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரூ.4,50,000/- கடனை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு கொடுக்க வேண்டிய மொத்த பணத்தையும் கொடுத்து விட்டார் என்றாலும் நான் அவர்

எழுதி கொடுத்த புரோநோட்டுக்களை திருப்பி கொடுக்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த 13 புரோநோட்டுமே நிரப்பப்படாமல் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் அதிக வட்டி கேட்டு கொடுக்காததால் தான் புரோநோட்டுக்களை வைத்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 12.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN Digitally signed by E SUGANTHAN Date: 2026.02.12 17:18:26 +0530

District Munsif,
Aundipatti.